1980 ஜூலை 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —

"மானியக் கோரிக்கை எண் 39 —சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 50,62,33,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மானியக் கோரிக்கை எண். 52—சாலைகள்பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" மானியக் கோரிக்கை எண் 52 —சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,54,41,000-க்கு மேற்படாத தொகை வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22-7-1980) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை மாலை 6-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

50. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 12.1.1980-ஆம் தேதியிடப்பெற்ற 23-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு- (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

51. சில பகுதிகளை ஆட்சி வரம்பாகக் கொண்ட தீர்ப்பாயங்களை அமைப்பது குறித்து, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29.4.1980-ஆம் தேதியிடப்பெற்ற 30903/VIII-2/79-15-ஆம் எண் கடிதத்தில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு, 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

52. வீட்டு வசதித் துறையில் 3.10.1972-ஆம் தேதியன்று வெளியான 27.19.1972-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II, பக்கங்கள் 1-68 ல் (ஆங்கிலத்தில்) வெளியான எஸ். ஆர். ஓ. எண். ஏ. 100/72 ஆம் எண் அறிவிப்பில் கண்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரியக் கடைநிலைப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து விட்டு வசதி-நகர்ப்பகுதி மேம்பாட்டுத் துறையின் 26.11.1979-ஆம் தேதியிடப் பெற்ற 2123-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு, குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல்-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*85. கோரிக்கை எண். 39-சாலைகளும்-பாலங்களும் மற்றும் கோரிக்கை எண். 52-சாலைகளும் பாலங்களுக்கான மூலதனச் செலவு-தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத்திட்டம், 1979-80-ஆம் ஆண்டுக்கான திட்டங்களும் (தமிழ், ஆங்கிலம்)

*86. கோரிக்கை எண். 34-க்கான தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்),

---

* 19-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.